# அறிக்கை

## ஓஎன்ஜிசி பள்ளியில் தீபாவளிக் கொண்டாட்டம்

**இடம்: நிரவி** **நாள்: 25.10.19**

காரைக்கால் மாவட்டத்திலுள்ள **நிரவி ஓஎன்ஜிசி பொதுப் பள்ளியில்** 25.10.19 அன்று காலை 9.00 மணியளவில் **அகத்தியர் அரங்கத்தில்** தீப ஒளித் திருநாள் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக தீபங்கள் ஏற்றப்பட்டு, இறைவணக்கப் பாடல் பாடப்பட்டது. பின்பு பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தை மாணவியர்களும், அசத்தலான மேற்கத்திய நடனத்தை மாணவர்களும் ஆடி அனைவரின் கவனத்தை ஈர்த்தனர். தீபாவளித் திருநாளின் சிறப்பை உணர்த்தும் கவினுறு நாடகமும், மாணவர்களின் கருத்துரையும் திறனுற இருந்தது.





பின்பு பள்ளியின் முதல்வர் **திரு. சுவாமிநாதன்** அவர்கள் தமது சிறப்புரையில், “தீபங்களின் ஒளி, இருளை அகற்றி, நல் வெளிச்சத்தைக் கொண்டு வருவது போல கல்வியால் மனதின் அறியாமைகள், தீமைகள் போன்றவை விலகி, வாழ்வில் வெளிச்ச ஒளி உண்டாகட்டும்” என்று பேசியதோடு அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார். மேலும் பாதுகாப்பாக பட்டாசை எப்படி வெடிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஒத்திகையும் காண்பிக்கப்பட்டது.





இறுதியாக நாட்டுப்பண்ணுடன் காலை 10.00 மணி அளவில் நிறைவுற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது.